# இலங்கையில் போருக்குப் பிந்தய சூழலில் சமுதாய அபிவிருத்தியில் சமுதாயஒழுங்கமைப்பின் சாத்தியமான வகிபங்கு

*Dr. S. Jeewasuthan*

**ஆய்வுச்சுருக்கம்**

சமுதாய அங்கத்தவர் ஒவ்வொருவரும் பாதுகாப்பாகவும், வளமாகவும், நலமாகவும் வாழுவதையே விரும்புவர். எனவே சமுதாயத்தினர் அனைவரும் அனைத்து வசதிகளையும் அனுபவிக்க வேண்டுமெனில் சிறந்த பொருளாதார வசதிகளும், பயனுறுதி வாய்ந்த பொதுச்சேவைகளும் காணப்பட வேண்டும். சமுதாயப்பணியைப் பொறுத்தவரையிலும் மக்களுடைய சொந்த முயற்சியில் அவர்களுக்கான வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதோடு, விழிப்புணர்வை ஏற்படுத்துவதனூடாக நீண்டு நிலைத்திருக்கத்தக்கதான வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதும் அதன் தலையாய கடமையாகக் காணப்படுகின்றது. இவ் ஆய்வின் குவிமையமானது சமுதாயப்பணிமுறை எவ்வாறு மக்களின் தங்குநிலையைக் குறைத்து அவர்களின் மீண்டெழும் திறனை மேம்படுத்திப் பாதிப்பின் விளிம்பு நிலையிலுள்ள மக்களின் இயலுமையை அதிகரிக்கவும் முயலுகின்றது என்பதாகும். ஏனைய தெற்காசிய நாடுகளுடன் இலங்கையின் சமூக, பொருளாதாரக் குறிகாட்டிகளை ஒப்பிடுகையில் அவை மிகவும் உயர்ந்த நிலையிலிருப்பினும், வட இலங்கைப் பகுதியில் போருக்குப்பிந்தய சூழலில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் சடுதியான அதிகரிப்பு, உளநலச்சேவைகளை விரிவாக்குதல் மற்றும் மக்கள் பங்கேற்பை மேம்படுத்துவதில் நிலவும் சவால்களைப் பயனுறுதி வாய்ந்த முறையில் எதிர்கொள்ளல் போன்ற விடயங்களில் இன்னும் சிறப்புறச் செயற்படவேண்டியுள்ளது. இந்நிலையில் இவற்றை எவ்வாறு சமுதாயப்பணியினூடாகச் செயற்படுத்திச் சமுதாய அபிவிருத்தியை எட்ட முடியுமென்பதனை இவ்ஆய்வுக் கட்டுரை விவாதிக்கின்றது.

**திறவுச்சொற்கள்:** சமூகப்பணி, சமூகப்பணியாளர், சமுதாயப்பணிமற்றும் சமுதாயஅபிவிருத்தி

## அறிமுகமும் பின்னணியும்

சமுதாய அபிவிருத்தியின் பல்வேறுபட்ட புலங்களிலும், பரிச்சயங்களிலும் சமூகப் பணியாளர்களது செயற்பாடுகளில் சடுதியானதோர் அதிகரிப்பினை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. சமுதாயப் பணிப்பரிச்சயம் என்பது சமுதாயங்களின் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்தவும், உதாரணமாக: சமுதாயப் பணியினூடாக கிராமிய வாழ்வின் அல்லது உள்ளூர்ப் பொருளாதாரங்களின் தரத்தினை மேம்படுத்தல் அல்லது குறிப்பிட்ட சமுதாய மக்களுடன் அல்லது குழுக்களுடன் அல்லது நிறுவனங்களுடன் பணி புரிவதன்மூலம் அகன்ற சமுதாய முறைமைகள், நிறுவனங்கள் மற்றும் அரசியல் செயன்முறைகளுடன் மக்களைத் தொடர்புற வைக்கவும் முடிகின்றது. சமுதாய அபிவிருத்தி அல்லது சமுதாய ஒருங்கமைப்பு நோக்கு நிலையில் பணிபுரியும் சமூகப் பணியாளனொருவர் சமூகப் பிரச்சினகளை ஏற்படுத்தக்கூடிய நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட முறைமைகளைப் பற்றிய அறிவை தான் பணிபுரியும் சமுதாயத்தினர்க்கு வழங்குவதுடன் சில வேளைகளில் அவர் தனது சமூகப்பணி பதவிகளில் எதிர்பார்க்கப்பட்டது போல தனிநபர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் கவனம் செலுத்தலாம் (Rwomire, 2011).

Estes (1997)இன் கருத்துப்படி,சமுதாயப்பணியாளர் சமுதாயங்களில் இருக்கக்கூடிய அதிகார இயங்கியலையும் (Power Dynamics) சமூக உறவையும் இவற்றின் செல்வாக்கிற்கு உட்படும் வெவ்வேறுபட்ட கட்டமைப்புக்கள் மற்றும் வேறுபட்ட சமுதாயங்களிற்கிடையிலான தொடர்பையும் புரிந்து கொள்ள முனைகின்றார். மேலும் கட்டமைப்பு ரீதியான மாற்றங்களை ஏற்படுத்துவதனூடாக சமூக நீதியை ஏற்படுத்துவதனையும் இலக்காகக் கொண்டு செயற்படுகிறார். உதாரணமாக வறுமையென்பது ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் முதன்மையான பிரச்சினையாக இருப்பின், சமுதாய நோக்கு நிலையுடன் பணிபுரியும் பணியாளரொருவர் இவ் வறுமை நிலையைத் தோற்றுவிக்கும் அரசியல் மற்றும் பொருளாதாரக் காரணிகளைக் கவனத்தில் கொள்வதுடன் வறுமைக்குக் காரணமாக அமையும் சமூகக் கொள்கைகளைப்பற்றி எடுத்துரைக்கவும் அல்லது அதற்கு எதிராகச் செயற்படுவதற்கு மக்களை ஒன்றிணைக்கவும் முனைவார்.

சமுதாயப்பணிக்கான பிரதான அணுகுமுறையென்பது ‘‘ஒன்றிணைந்து பணிபுரியும் மக்களிடம் தமது சூழ்நிலையை முன்னேற்றிக் கொள்வதற்கான இயலுமை, அதற்குரிய அடிப்படை அனுபவம் என்பனஅவர்களிடமே காணப்படுகின்றன’’ என்பதனை ஏற்றுக்கொள்வதாகும். இவ்வாறான நம்பிக்கையென்பது சமூகப்பணியின் அடிப்படை விழுமியங்களில் மிகவும் பிரதானமானதொன்றாகக் காணப்படுகின்றது. சமுதாய அபிவிருத்தியினை

ஏற்படுத்துவதற்குச் சமுதாயப்பணியாளர்கள் பயன்படுத்தும் சில முதன்மையான கருவிகளாக,

1 சமூக விழிப்புணர்வை மேம்படுத்துதல்
2 தலைமைத்துவத்தை அடையாளம் காணுதலும் அதனை விருத்தி செய்தலும்
3 தேவைக்கு ஏற்ற வகையில் தேவையான பங்காளிகளுடன் தந்திரோபாயக் கூட்டுக்களை ஏற்படுத்துதல்
4 வளர்ந்தோர் கற்றலை ஊக்குவித்தல்
5 கூட்டுறவை மேம்படுத்துதல்
6 சமுதாயத்தின் இயலுமையைக் கட்டியெழுப்புதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இச்செயற்பாடுகளிற்கு மேலதிகமாகச் சமுதாயப் பணியாளரொருவர் வெவ்வேறுபட்ட, பரந்த விடயங்களிலும் தனது கவனத்தைக் குவிக்க வேண்டியுள்ளது. உதாரணமாக சமுதாயத்தில் நிலவும் வீடின்மை தொடர்பான சவால்கள், அங்கு நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான சவால்கள் பற்றித் தெரிந்து கொள்வதுடன் சமுதாய அபிவிருத்தி தொடர்பான ஆய்வுச் செயற்பாடுகளிலும் ஈடுபட முடியும். அத்துடன் சமுதாயப் பணியாளர்கள் சமூகக் கொள்கை வகுப்பாக்கங்களில் கவனம் செலுத்துவதன் மூலம் சமூக, பொருளாதார அரசியல் காரணிகள் எவ்வாறு அம்மக்களின் வாழ்க்கையில் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதை அறிந்து கொள்வதுடன், சமூகக் கொள்கைப் பகுப்பாய்வினையும் மேற்கொள்ள முடியும் (Estes, 1997).

சமுதாயப் பணியாளர்கள் தமது பெரும்பாலான நேரத்தை சமுதாயத்திலுள்ள முதன்மை உறுப்பினர்களுடனும் (Key persons) கூட்டுப் பங்காளர்களுடனும் (Stakeholders) பணியாற்றுவதற்காக ஒதுக்குவதன் மூலம் அச்சமுதாயத்தினால் அடைந்துகொள்ளக்கூடிய பொதுவான மற்றும் சாத்தியமான இலக்குகளை அடையாளம் காண முனைகின்றனர். இந்நோக்கத்திற்காக சமுதாயப்பணியாளர் குறிப்பிட்ட சமுதாயச்சவால் தொடர்பாகத் தனக்குத் தெரிந்த அனைத்து தகவல்களையும் சமுதாயத்திலுள்ள முதன்மை உறுப்பினர்களுடனும், கூட்டுப்பங்காளர்களுடனும் பகிர்ந்து கொள்வதனூடாக பிரச்சினைகளைக் கையாள்வதற்கான சிறந்த வழிமுறையொன்றினைக் கண்டறிவதற்கான இயலுமையைப் பெற்றுக்கொள்கின்றார்.

எனவே சமுதாயப்பணியானது சமூகப்பணியின் ஒரு முதன்மையான முறையாகத்திகழ்வதுடன். அது

1 சமுதாயத்து உறுப்பினர்களிடையே அறிவை மேம்படுத்தல்

2 வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல்
3 வறுமையைத் தணித்தல்
4 பால்நிலைச் சமத்துவத்தினை ஏற்படுத்தல்
5 சமுதாயத்திற்குரிய நலச்சேவைகளை மேம்படுத்தல்

போன்ற பணிகளையும் தனது அடிப்படை நோக்கங்களாகக் கொண்டு செயற்படுகின்றது. எனவே சமூகப்பணிச் செயற்பாட்டிற்கு கோட்பாட்டுரீதியான அறிவும் உறுதியான பயிற்சி மற்றும் செயற்பாட்டு அறிவும் புறந்தள்ள முடியாத அடிப்படை மூலங்களாகக் காணப்படுகின்றன (Bernstein, 1995). இக்கட்டுரையானது சமுதாயப்பணி எவ்வாறு இலங்கைக்கு வெளியே ஏனைய நாடுகளில் சமுதாய அபிவிருத்தியை ஏற்படுத்துவதில் முனைப்புக் காட்டுகின்றது என்பதனையும் எமது நாட்டில் அது எவ்வாறு சிறந்நதொரு சமூகப்பணிச் செயல்முறைகளிலொன்றாக அமைய முடியுமென்பதனையும் விவாதிப்பதாக அமைகின்றது.

**ஆய்வின் நோக்கங்கள்**

1. சமூகப்பணிப் பரிச்சயத்தின் ஒரு பிரதான கூறாகச் சமுதாய அபிவிருத்தியமைந்துள்ளது என்பதனை வெளிக் கொண்டு வருதல்.
2. சமுதாய அபிவிருத்தியில் சமுதாயஒழுங்கமைப்பின் வகிபங்கைப் பரிசீலித்தல்.

**எண்ணக்கருச் சட்டகமும் பிரதான எண்ணக்கருக்களும்**

இவ் ஆயவுக்கட்டுரையின் எண்ணக்கருச் சட்டகமானது பின்வரும் பிரதான எண்ணக் கருக்களை மையப்படுத்துகின்றது. இவை ஆய்வின் நோக்கங்களைக் குறிப்பாகப் பின்பற்றுவதற்கும், ஆய்வின் செல்திசையை தீர்மானிப்பதற்குமான வழிகாட்டியாக அமைந்துள்ளது.

**சமூகப்பணியும் அதன்உதவி தேவைப்படுவோரும்**

சமூகப்பணியென்பது வெவ்வேறுபட்ட மூலோபாயங்களைப் பயன்படுத்தி தனிநபர், குழுக்கள், சமுதாயத்தினர் போன்றோரைத் தமக்குத் தாமே உதவிக் கொள்வதற்குரிய வலுப்படுத்தலை மேற்கொள்ளும் ஒழுங்கமைக்கப்பட்ட தொழில் வாண்மையாகும். சமூகமொன்றில் காணப்படக்கூடிய விளிம்பு நிலைப்படுத்தப்பட்ட, எளிதில் பாதிப்படையக்கூடிய பிரிவினர், ஆதரவற்றோர், அரவணைக்கப்படாதோர் போன்றோரே சமூகப்பணியில் உதவி தேவைப்படுவோர் (Needy people) என அழைக்கப்படுகின்றனர் (Skrodele-Dubrovska, 2012).

### சமூகப்பணியாளர்

சமூகப்பணியாளர் எனப்படுபவர் ‘‘மக்கள் தமக்குத் தாமே உதவிக் கொள்வதற்காக அவர்களுக்கு உதவும் ஒரு தொழில் வாண்மையாளராகும்’’. சமூகப்பணியாளரின் ஆதரவுடன் மக்கள் தமது அன்றாட வாழ்வினை முகாமை செய்யக்கூடியதான நிலையை எட்ட முடியும். இதற்குச்சமுதாயப் பணியாளர் சமுதாய ஒழுங்கமைப்பு உட்பட பல்வேறுபட்ட சமூகப்பணி முறைமைகளை பயன்படுத்துகிறார் (Cherry, 2017).

### சமூதாய அபிவிருத்தி

சமுதாய அபிவிருத்தியென்பது மக்களின் பயனுறுதி வாய்ந்த பங்கேற்பு மற்றும் அவர்களின் சமுதாய முன்னெடுப்பு என்பவற்றின் அடிப்படையில் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கான அடிப்படை நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதற்காக வடிவமைக்கப்பட்ட செயல்முறையாக காணப்படுகின்றது (Cavaye, 2006).

### முறையியல்

இவ் ஆய்வு நோக்கத்திற்காக கண்டறிதல் ஆய்வு முறையியல் (Explorative research methodology) பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் துரிதமான சமூக, பொருளாதார அரசியல் மாற்றங்களிற்கு உட்பட்டுவரும் இலங்கைச் சமுதாயங்களில் சமுதாய அபிவிருத்தியை ஏற்படுத்துவதில் சமுதாயப் பணியின் பங்கு எவ்வாறு அமையக்கூடும் என்பதனை வெளிப்படுத்த முதலாம், இரண்டாம்நிலைத் தரவுகள், புலமைசார் கட்டுரைகள், நிகழ்நிலைக் கட்டுரைகள் (Online Journals) என்பனவற்றினூடாக சமுதாய அபிவிருத்தியில் சமுதாயப்பணியின் பங்கு பற்றி விபரிக்கின்றது. வடபுலத்தில் சமூகப்பணித்துறையில் ஐந்து வருடங்களிற்கு அதிகமாகப் பணிபுரியும் நோக்கம் கருதிய மாதிரியெடுப்பின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட 20நிபுணர்களின் நோக்குநிலைகள் மற்றும் கட்டுரையாளரின் சுய அவதானம் என்பவற்றினைப் பயன்படுத்தி ஆழமான நேர்காணல் மூலம் முதலாம்நிலைத் தரவுகள் திரட்டப்பட்டன.

### சமுதாய அபிவிருத்தியில் சமுதாய ஒழுங்கமைப்பு

சமுதாய ஒழுங்கமைப்பு என்பது தற்போது உலகளாவிய ரீதியில் பிரபல்யமடைந்து வருகின்ற சமூகப்பணி முறைமைகளிலொன்றாகக் காணப்படுகின்றது. சமுதாய ஒழுங்கமைப்பு அணுகுமுறையானது மக்கள் தாமாக முன்வந்து பொறுப்பேற்கும் சுய உதவிச் செயற்திட்டங்கள் தொடர்பாக அதிகம் கவனம் செலுத்துவதாக அமைந்துள்ளது.மக்களால்

பொறுப்பேற்கப்படும் இச் செயற்திட்டங்களானவை அவர்கள் உணர்ந்து கொண்ட தேவைகளைப் (Felt needs) பூர்த்தி செய்வதற்கும், அவர்களின் பொதுவான சமூக, பொருளாதார அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கும், உதவிகரமானதாக அமைகின்றன. சில நாடுகளில் சமுதாய அபிவிருத்தித் திணைக்களங்களே கிராமிய அபிவிருத்திக்கான முழுமையான பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருப்பதனைக் காணக்கூடியதாகவுள்ளது. இலங்கையைப் பொறுத்தவரையிலும் அதன் சனத்தொகைக் கட்டமைப்பில் ஏறத்தாழ 60% ஆனது கிராமிய மக்களின் பிரசன்னமாகக் காணப்படுவதனால் கிராமிய அபிவிருத்தி முதன்மைப்படுத்தப்பட்டதோடு கிராமிய அபிவிருத்தித் திணைக்களங்கள் மாகாணமட்டத்தில் கிராமிய அபிவிருத்திக்குப் பொறுப்பாகக் காணப்படுகின்றன (Bernstein, 1995).இதனை விடவும் நகர அபிவிருத்தித் திட்டங்கள், சேரிப்புறங்களை மேம்படுத்துவதற்கான திட்டங்கள், உளநோயாளர்கள், மது மற்றும் போதைப்பொருள் பாவனையாளர்களுக்கான புனர்வாழ்வழிக்கும் திட்டங்கள், தொழிற்பயிற்சிச் செயற்பாடுகள், பொழுதுபோக்கு வசதிகளை ஏற்படுத்தல், குறைந்த வருமானப் பிரிவினர்க்கான வீட்டு வசதித் திட்டங்கள் என்பனவும் செயற்படுத்தப்படுகின்றன.

Estes (1997) இன் கருத்துப்படி பின்வரும் மூன்று காரணங்களிற்காக சமுதாய அபிவிருத்திப் பரிச்சயம் என்பது எப்போதும் நகர்ப்பகுதிகளில் சமூகப்பணியின் மைய எண்ணக்கருவாகத் திகழ்கின்றது. அவையாவன:

1 முன்னர் ஒழுங்கமைக்கபடாமலிருந்த சமுதாயங்களைப் பரவலாக்கப்பட்ட / ஏற்றுக் கொள்ளப்பட்ட சமூகச்செயற்பாட்டு நோக்கத்திற்காக பயனுறுதிவாய்ந்த முறையில் ஒன்றிணைத்தல். (உ+ம்:- பாடசாலை வசதிகளை மேம்படுத்தல் மற்றும் பாதுகாப்பான சுற்றயலை உருவாக்குதல்).
2 சமுதாயங்களின் பயனுறுதிவாய்ந்த தொழிற்பாட்டுக்கு அவசியமான சமூக ஒழுங்குகளை உருவாக்கக்கூடிய வகையில் பாரம்பரிய குடும்ப மற்றும் உறவுமுறைகளை வலுப்படுத்தல்.
3 சமுதாய அடிப்படையிலான சமூக நலன்புரி மற்றும் சமூகசேவைச் செயற்பாடுகளானவை வறியோருக்கு உதவுவதற்கான மிகப் பயனுறுதி வாய்ந்த வழிமுறையாகக் காணப்படுதல்.

### தேசிய அபிவிருத்தியில் சமூகப்பணியின் தாக்கம்

கோட்பாடுகள் மற்றும் பரிச்சயம் என்னும் இரண்டு பரப்புகளிலும் அபிவிருத்தி பற்றிய கருத்தாடல்கள் முரண்படுபவையாக உள்ளன. இவை சிக்கல் தன்மை வாய்ந்ததாகவும் காணப்படுகின்றன. அபிவிருத்தியுடன்

தொடர்புடைய எண்ணக்கரு மற்றும் செயன்முறைரீதியான கருத்துக்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய சிக்கல் தன்மை காரணமாக இக்கட்டுரையானது தற்கால அறிஞர்களால் பெரிதும் முதன்மைப்படுத்தப்படும் "அபிவிருத்தியடைந்து வரும் உலகில் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தலே அபிவிருத்தியின் நோக்கமாகும்" என்கின்ற புள்ளியுடனேயே பொருந்திப் போவதாக அமைகின்றது. Rodney (1972) இன் கருத்துப்படி அபிவிருத்தியானது தனிநபரைப் பொறுத்தவரை அவரின் திறன்களையும், இயலுமைகளையும் அதிகரித்தல், சுதந்திரம், புதிது புனையும் ஆற்றல், சுயஒழுக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் பொருளாதாரரீதியான நலம் என்பவற்றின் மீது செல்வாக்குச் செலுத்துகின்றது என்கின்றார். சமூகமட்டத்தினைப் பொறுத்தவரையில் மக்களின் இயலுமையை அதிகரிப்பதுடன் உள்ளார்ந்த மற்றும் வெளிவாரியான உறவுகளை ஒழுங்குபடுத்துவதனையும் முதன்மை நோக்கமாகக் கொண்டதாகும்.

Todardo மற்றும் Smith (2003) இன் கருத்துப்படி அபிவிருத்தி என்பதன் அர்த்தம் நபருக்கு நபர் வேறுபடுவதுடன் சில வேளைகளில் வெவ்வேறு நோக்குநிலைகளிலிருந்தும் விவாதிக்கப்படலாம். இவரது கருத்துப்படி ஓரளவுக்கு நீண்டகால அடிப்படையில் தளம்பல் இல்லாத தேசிய பொருளாதாரத்தைக் கொண்ட நாடொன்று தனது மொத்தத் தேசிய உற்பத்தியை 5% தொடக்கம் 7% ஆல் அதிகரிப்பதே பொருளாதார வளர்ச்சியாகப் பார்க்கப்படுகிறது. உண்மையில் இங்கு ஒரு நாடு அதன் சனத்தொகை வளர்ச்சி வீதத்தினைவிடவும் அதன் பொருளாதார வளர்ச்சி வீதத்தினை உயர்த்துவதே பொருளாதார அபிவிருத்தியாகப் பார்க்கப்படுகின்றது. எனினும் Stutz மற்றும் Desousal (1988) இன் கருத்துப்படி "ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமானது வளர்ந்த மற்றும் வளர்முக நாடுகளின் சமூக அபிவிருத்தியை அளவிடுவதற்காக மனித அபிவிருத்திச் சுட்டியைப் (HDI) பயன்படுத்துவதுடன், இது மனித, சமூக மற்றும் பொருளாதார விடயங்களான ஆயுள் எதிர்பார்க்கை, எழுத்தறிவு வீதம், தலா வீத வருமானம் மற்றும் கொள்வனவுச் சக்தி என்பன பற்றியும் விபரிக்கின்றது. எனவே இதனை நுணுகிப் பார்க்கும்போது அபிவிருத்திக்கான சில பிரதானமான சமூகக் குறிகாட்டிகள் அவசியமானவை என்பது புலப்படுகின்றது. உதாரணமாகச் சிறந்த எழுத்தறிவு வீதத்தினை அடைந்து கொள்ளல், மாணவர்களைப் பாடசாலைகளில் கற்றல் செயற்பாடுகளுக்காக இணைத்தல், சுகாதாரம் அதன் சேவைகளும், வீட்டுத் திட்டங்களை வழங்கல் போன்ற வெவ்வேறு செயற்பாடுகள் அபிவிருத்திச் செயன்முறையில் முதன்மைப்படுத்தப்படுகின்றன. எனவே அபிவிருத்தி மீள வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளதோடு, வறுமையைக் குறைத்தல் அல்லது

ஒழித்தல், பொருளாதார வளர்ச்சியோடு வேலையின்மையைக் குறைத்து வருமானச் சமமின்மையை மட்டுப்படுத்தி மக்களின் வாழ்க்கைத்தரத்தை அதிகரிப்பதென்பதே அபிவிருத்தியாகும் எனும் கருத்தும் இன்று நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

எனவே சமூகப்பணி நோக்குநிலையில் அபிவிருத்தி என்பது சமூகம், பொருளாதாரம் போன்ற இரண்டு முக்கிய துருவங்களை முதன்மைப்படுத்துகின்றது. பொருளாதாரம் என்பது பொருளாதார வளர்ச்சி மற்றும் அதிகரித்த உற்பத்தியைக் குறிப்பதோடு சமூகம் என்பது மக்களின் வாழ்க்கைத்தரம், உளப்பாங்கு மற்றும் சமூக நிறுவனங்கள், வெளியக நிறுவனங்களுடனான உறவுகள் என்பவை மேம்படுவதாக அமைகின்றது. மேலும் அபிவிருத்தியென்பது ஒரு தொடர்ந்து செல்லும் இயங்கியில் செயன்முறையாகவும், இதன்மூலம் மக்கள் தம்மையொரு சமுதாயமாக இனங்கண்டு கொள்ளவும், தேவையான அறிவு, விழுமியங்கள் மற்றும் நிறுவனரீதியான திறன்கள் என்பவற்றைப் பயன்படுத்தித் தம்மைக் கூட்டாக வலுப்படுத்திக் கொள்ளவும், தொடர்ச்சியாக சமுதாய வளங்களைப் பகிர்ந்து கொள்ளவும், அவற்றை மேம்படுத்திக் கொள்ளவும், சமுதாயத்தின் அனைத்து உறுப்பினர்களிடையேயும் நேர் சீரான மாற்றத்தை ஏற்படுத்தி அதன்மூலம் அனைவரும் நன்மையடைய வைப்பதாகவும் உள்ளது. மேலும் சமுதாய அபிவிருத்தியென்பது பொருளாதார, பண்பாட்டு, சமூக உரிமைகளை உணர்ந்து அவற்றைப் பயன்படுத்துவதனூடாக வறுமை, அசமத்துவம் (inequality), வருந்துதல்கள் (sufferings) மற்றும் அநீதி (injustice) என்பவற்றை முடிவுக்குக் கொண்டுவரவும் முயலுகின்றது (Oxfam Community Aid Abroad, 2001).

### சமுதாய அபிவிருத்தியும் சமுதாயப்பணியும்: இலங்கையின் அனுபவம்

இலங்கையின் இரண்டு பிரதான இனங்களிற்கிடையே ஏற்பட்ட மூன்று தசாப்தங்களாக நீடித்திருந்த ஆயுத மோதல்கள் 2004 இல் உத்தியோக பூர்வமாக முடிவுறுத்தப்பட்டிருப்பினும் யுத்த வடுக்கள், கொடிய விளைவுகள் ஆறுவதற்கு இன்னும் நீண்டகாலம் தேவைப்படுவதோடு உளக்காயங்களை ஆற்றுதல், இனங்களிடையே பரஸ்பரம் நம்பிக்கையை ஏற்படுத்துதல், மன்னித்தல், மீள்-நல்லிணக்கத்தினை ஏற்படுத்துதல் என்கின்ற பல்வேறு முயற்சிகள் நடைபெற்றுவரும் நிலையில் இச்செயற்பாடுகளை போரினால் பெரிதும் பாதிக்கப்பட்ட இப்பிரதேசங்களில் சமூகம் எனும் பெரும்பாக (Macro level) மட்டத்திலிருந்து அணுகுவதனை விடவும் சமுதாயப்பணி எனும் நுண்பாக அணுகுமுறை (Macro level approach) மூலம் அணுகுவதே சாலச்சிறந்ததாகும். ஏனெனில் தனிமனிதப்பாதிப்புக்கள் கவனத்திற்குட்படும் போதே அது முழுமொத்தச்

சமுதாயத்தினையும் கருத்திலெடுப்பதாக அமையும். எனவே இதற்குச் சமுதாயப்பணியின் தேவை இன்றியமையாததாகும்.

ஆயுத மோதல்கள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டாலும் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட சமுதாயங்களை அறிவு பூர்வமாகப் பலப்படுத்துவதற்கான முயற்சிகள் மிகக் குறைவாக நடைபெற்றுவரும் நிலையில் இவ்வாறான அறிவும் அனுபவமும் கொண்ட சமுதாயப்பணியாளர்களை உருவாக்கவேண்டிய தேவை இன்று உணரப்பட்டுள்ளது. இவ்வாறான சமுதாயப்பணியாளர்களை உருவாக்குவதன்மூலம் ஆர்வமும் விருப்பமுள்ள பல்வேறுதரப்பு பொதுமக்கள் அரச அலுவலர்கள், இளைஞர் யுவதிகள், மாணவர்களுக்குப் பயிற்சியளித்து அவர்களின் ஆற்றலை மேம்படுத்துவதனூடாக யுத்தத்திற்குப்பின் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கும் மக்கள் தமக்குத்தாமே உதவுவதற்கும் பிறருக்கான உதவியை வழங்குவதற்கும் அவர்களைத் தயார்படுத்தும் பணி மிகவும் முக்கியம் வாய்ந்ததுடன் இதுவே சமுதாயப்பணியாளிடம் பெரிதும் எதிர்பார்க்கப்படும் பொறுப்பாகவும் காணப்படுகின்றது. இதுவே சமூகப்பணியின் அடிப்படைத் தத்துவமும் தாற்பரியமுமாகும்.

**இலங்கையில் போருக்குப் பிந்தைய சூழலில் உளசமூக மேம்பாட்டை ஊக்குவித்தலிலும் உள்ளூர்ச் சமுதாயங்களை வலுப்படுத்துவதிலும் சமுதாயப்பணியின் வகிபங்கு**

இன்று போர் ஓய்ந்த சூழலில் இளைஞர்களிடையே வன்முறைக் கலாசாரம், மது மற்றும் போதைப் பொருள் துஷ்பிரயோகம், சிறுவர் துஷ்பிரயோகங்கள், வீட்டுவன்முறை, வறுமை, வேலை வாய்ப்பின்மை, பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களின் சடுதியான அதிகரிப்பு, நிதிநிறுவனங்களின் அதீத செயற்பாடுகளும் அவற்றின் விளைவுகளுமென சமுதாயப்பிரச்சினைகள் பல்பரிமாணம்பெற்று வருவதனை அவதானிக்க முடிகிறது. அத்துடன் யுத்தகாலத்தில் இருந்ததை விடவும் இன்றுள்ள சவால்கள் மிகவும் சிக்கல் வாய்ந்தவையாகவும் எளிதில் இங்குள்ள பாரம்பரிய வாழ்வினை அசைத்துப் பார்க்கும் வல்லமை கொண்டவையாகவும் உள்ளன. மக்களிடையே சுயாதீனமான, தங்கு நிலையற்ற வாழ்க்கையை மேம்படுத்துவதுடன் அவர்களின் பலங்களை இனங்கண்டு அவர்களின் பிரச்சினைகளை அவர்களாகவே தீர்ப்பதற்கு சமுதாயப்பணி மிகவும் இன்றியமையாததாக அமைந்துள்ளது.

எனவே சாதாரணமான, பாரம்பரியமான மற்றும் ஒரே வகைத்தன்மையான அணுகுமுறைகள் இவ்வாறான சவால்களைக் கையாள்வதற்குப் போதுமானதல்ல என புலமையாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளதோடு தொழில் வாண்மையான செயன்முறைகளே இன்று தலையாய தேவையாக உள்ளது என்பதனையும் வலியுறுத்துகின்றனர். அதாவது

மேற்கூறப்பட்ட சவால்கள் ஒவ்வொன்றும் தனித்தன்மையுடையவை. சவால்களை எதிர்நோக்குபவர்களும் தனித்தன்மை வாய்ந்தவர்கள். எனவே ஒவ்வொரு சவாலுக்கும் ஒவ்வொருவிதமான அணுகுமுறை தேவைப்படுவதோடு பிரச்சினையை எதிர்நோக்குபவர்களும் வெவ்வேறான தலையீடு தேவைப்படுபவர்களாக உள்ளனர். உதாரணமாக மதுவுக்கு அடிமையானவர்களுக்கும் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கும் பயன்படுத்தப்படும் சமுதாயப்பணி அணுகுமுறை வெவ்வேறுபட்டதாகும். வெளிப்படையாகப் பார்க்கும்போது இரண்டும் ஏதோ ஒரு வகையில் ஒரேமாதிரியான சவாலாகக் காணப்பட்டாலும் இவ்விரண்டும் ஏற்படுத்துகின்ற தனியாள், குடும்ப, சமுதாய, சமுக மற்றும் சட்டவிளைவுகள் வேறுபட்டனவயாகும். அவற்றுக்கான சமுதாயப்பணித் தலையீட்டு அணுகுமுறையும் வேறுபட்டதாகவே அமையும் எனவே சாதாரணமாக ஒருவருக்கு அறிவுரை கூறுவது, பணம் அல்லது பொருளாக உதவிபுரிவது போன்ற விடயங்கள் சிலவேளைகளில் குறிப்பிட்ட பிரச்சினையைத் தீர்ப்பதில் வெற்றி பெறாமல் போவதுடன் பிரச்சினையின் தீவிரத்தையும் அதிகரித்து விடலாம். உதாணமாக உளநோய்கள், வீட்டுவன்முறை, சிறுவர் துஷ்பிரயோகம் போன்றன இன்று தொழில் வாண்மையான கூட்டு அணுமுறை மூலமும் உறுதியான தொடர்பு வலையமைப்பின் மூலமும் தீர்த்து வைக்க வேண்டிய தேவையுள்ளனவாக காணப்படுகின்றன.

இவற்றுக்குப் பாரம்பரியமான அல்லது தொழில் வாண்மையற்ற அணுகுமுறைகள் பயன்படுத்தப்பட்டாலும் நிபுணத்துவம் வாய்ந்தவர்களின் வாதத்தின்படி மேற்கூறிய முறைகளோடு தொழில் வாண்மையான அணுமுறைகளும் தேவைப்படுகின்றன. மேலும் தலையீட்டின் எந்தப்புள்ளியில் பாரம்பரியமான அணுகுமுறையைப் புகுத்துவது எங்கே வல்லுனர்களை நாடுவது எனத்தீர்மானிப்பதும் இங்கு முதன்மையான விடயமாகும். எனவே இவ்வேறுபட்ட அணுகுமுறைகள் பற்றி மக்களிடையே எடுத்துரைப்பது சமுதாயப்பணியாளரின் கடப்பாடாகும்.

இதுவே இன்று ஒன்றிணைக்கப்பட்ட சமூகப்பணி அணுகுமுறையாகக் (Integrated Social Work Approach)காணப்படுவதுடன்தொழில்வாண்மையான மற்றும் பாரம்பரியமான அணுமுறைகள் இணைந்த சமுகப் பணித்தலையீட்டு அணுகு முறையெனவும் (A Combination Of Professional & Traditional Approach) இது அழைக்கப்படுகின்றது. இவ்வாறு நாம் அதிகம் கேள்வியுறாத அணுமுறைகள் மனிதர்களின் தனித்தன்மை அவர்கள் எதிர்நோக்குகின்ற சவால்களின் தீவிரம் மற்றும் இயல்பு என்பவற்றைப் பொறுத்து வேறுபடுகின்றன. இன்று நாம் நுண்பாக, இடைப்பாக மற்றும் பெரும்பாகத்தலையீடுகள் என வகைப்படுத்துமளவிற்குச் சவால்களின் தன்மைகள் வேறுபட்டுள்ளதோடு

அவற்றைக் கையாள்வதற்கான அறிவு, தேர்ச்சி மற்றும் அனுபவமட்டங்களும் வேறுபடுகின்றன.

இவை சமுகஆதரவு, உளவளத்துணை சமுகப்பணி, சிகிச்சை முறையிலான அணுமுறைகளென இன்று பல்வேறு தளங்களிற்குப் பரவலாக்கப்பட்டுள்ளன. அத்துடன் பிரச்சினையைக் கேட்டறிந்து, அதனை வெவ்வேறுபட்ட படிமுறைகளினூடாக அதாவது நேர்காணல், சமூகவரைபடம், அவதானம், வாசிப்பு, நிபுணர்கள் மற்றும் சகதொழில்வாண்மையாளர்களின் அனுபவப்பகிர்வு என்பவற்றினூடாக நோய் நிர்ணயம் செயயப்படுகின்றது. மேலும் பொருத்தமான தலையீட்டுத் திட்டமொன்றைத் தயார்செய்து, அதனை வெவ்வேறுபட்ட பங்காளர்களோடு இணைந்து நடைமுறைப்படுத்தி, விளைவுகளை ஆய்வுசெய்து அவற்றில் உரிய மாற்றங்களை ஏற்படுத்தி, தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதோடு, அவதானித்து, நீண்டு நிலைத்து நிற்கக்கூடிய வகையில் நேர்மயமான மாற்றங்களைப் பேணி, எதிர்மறையான மாற்றங்களைக் களைவது என்பதாக தொழில்வாண்மையான அணுகுமுறையென்பது பல்வேறுபட்ட செயன்முறையினூடாக மேற்கொள்ளப்படுகின்றது.

**சமுதாயப்பணியில் முழுதளாவிய அணுகுமுறையின் தேவை**

இலங்கையின் தற்போதைய சமூகச்சூழலில் தலையீடு செய்வதற்கு சமுதாயப் பணியில் முழுதளாவிய அணுகுமுறையின் தேவை காணப்படுகின்றது. இதற்குச் சமூகப்பணியாளர்களுக்கு உரிய துறைரீதியான முறைசார் அறிவு, கள அனுபவம், புத்தாக்கப் பயிற்சி, அனுபவப்பகிர்வு, மேற்பார்வை என்பன தேவைப்படுகின்றது.இன்று உரிமம்பெறுதல், ஆய்வுகளை மேற்கொள்ளல் உள்ளூர் மற்றும் சர்வதேசக் கருத்தரங்குகளில் கட்டுரைகளைச் சமர்ப்பித்தல், தொழில்வாண்மைச் சங்கங்களில் அங்கத்துவம் பெறுதல், அறிவுத்தளத்திற்குப் பங்களிப்புச் செய்தலென சமூகப்பணித் தொழில்வாண்மையென்பதன் அர்த்தம் மற்றும் புரிதல் என்பன பலமுகங்களைக் கொண்டு காணப்படுகின்ற நிலையில் சமுதாயப் பணியாளர்களும் தம்மைப் பயிற்றுவிப்பதுடன் தமது திறன்களைப் புதுப்பிக்க வேண்டிய நிர்ப்பந்தமும் காணப்படுகின்றது.

இன்றைய கல்வியுலகில் சமூகப்பணியானது சான்றிதழ், பட்டப்படிப்பு, பட்டப்பின் படிப்பு, கலாநிதிப் படிப்பு, கலாநிதிப் பின்பட்டப்படிப்பு என விரிவடைந்து செல்வதுடன் தேவைக்கேற்ற வகையில் தனியன்களுடனும் குடும்பங்களுடனும் பணி புரிதல், சமூகக் குழுக்களுடன் பணிபுரிதல், சமுதாயங்களுடன் பணிபுரிதல், சமுகக் கொள்கைவகுப்பு, சமூக நலன்புரிநிர்வாகம், சமூகப்பணி ஆய்வு, சமூகச் செயற்பாடு என பல்வேறு பாடப்பரப்புகள் உள்வாங்கப் பட்டுள்ளதோடு களக்கற்கையும் சரி

விகிதமாக அல்லது தேவைக்கேற்ற வகையில் கலந்து பாடநெறிகள் உருவாக்கப்பட்டுள்ளதோடு சமுகவிஞ்ஞானத் துறைப்பாடங்களான உளவியல், சமூகவியல், பொருளியல் போன்றவற்றுடன் மனித உரிமைகள், சட்டம், இடர்முகாமைத்துவம், உலகமயமாக்கம், முரண்பாட்டுத்தீர்வு, மனித வளமுகாமைத்துவம், இரண்டாம் மொழி, கணினி அறிவு என வெவ்வேறு முறைகள் கலந்த ஒரு மாறுபட்ட யதார்த்த அணுகுமுறையாக வளர்ந்துள்ளது. எனவே சமுதாயப் பணியாளர்களும் தம்மை இவ்வாறான மாற்றங்களிற்கு முகம் கொடுக்கத் தயார்படுத்த வேண்டியுள்ளது.

மேலும் இன்றைய இலங்கைச் சமுதாயங்களோடு பணிபுரிவதற்கு மருத்துவ சமூகப்பணி, உள சமுகப்பணி, முதியோர்பணி, சிறுவர்களுக்கான பணி, பாடசாலைச் சமுகப்பணி, பெண்கள் பணி, மாற்றுத்திறனாளிகள் மற்றும் விசேட தேவையுள்ளோருக்கான பணி மற்றும் குடும்ப நலச்சமூகப் பணியென பல்வேறு சிறப்புத் தேர்ச்சிகளைக் கொண்டும் சமுதாயப் பணியாளர்கபைப் பயிற்றுவிக்க வேண்டியுள்ளது. இதனைவிடவும் அரசஅலுவலர்கள் அரசசார்பற்ற நிறுவனப்பணியாளர்கள், பொதுத்தொண்டர்கள், ஆர்வமுடையோர் என வெவ்வேறுபட்ட தரப்பினரையும் இலக்குக் குழுக்களாகக் கொண்டு இன்று பயிற்சிப்பட்டறைகள், குறுங்காலக் கற்கை நெறிகள் என சமூகப்பணியின் வீச்சு விரிவடைந்து கொண்டு செல்வதோடு இன்று இதன் எல்லையை வரையறுக்கமுடியாதுள்ளது. எனவே பல்றேுபட்ட பங்குதாரர்களை இணைத்தும் அவர்களோடு பரஸ்பரம் தொடர்புகளைப் பேணியும் சமுதாயப் பணியாளர்கள் தொழிற்பட வேண்டியுள்ளது.

இலங்கை போன்ற நலன்புரி அரசுகள் நடைமுறையிலுள்ள அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளிலும், போரழிவுகளிலிருந்து மீளும் மற்றும் பேரிடர்களுக்கான அச்சுறுத்தலுள்ள நாடுகளிலும் சமுதாயப்பணியின் தேவை அதிகரித்துள்ளதோடு சமுக சேவைகள் நலன்புரிகள், சமுகஅபிவிருத்திச் செயல்முறைகள் என்பவற்றை மேம்படுத்தவும் சமுதாயப்பணியின் பங்களிப்பு இன்றியமையாததாக உள்ளது. மேலும் இலங்கை போன்ற நாடுகளின் போருக்குப் பிந்திய வாழ்வியலில் மீள்குடியேற்றம், நிலங்கள் கையகப்படுத்தல் நீண்டகாலச் சிறைவாழ்வு, காணாமல் போதல்கள், இளையோர் வன்முறை, வேலையின்மை வறுமை என சில விசேடமான சவால்களும் காணப்படுவதோடு இவற்றுக்கு விசேடமாகத் தேவைப்படும் அறிவு, அனுபவம் என்பன மிகவும் பற்றாக்குறையாக உள்ளது.

அத்துடன் சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர் ஊழியம், பாடசாலை இடைவிலகல் என்பன இன்று கூர்மையடைந்து வரும் சவால்களாக இனம் காணப்பட்டுள்ளன. ஆகவே சிறுவர்களோடு பணிபுரியக்கூடிய வகையில்

ஆர்வமுள்ள தரப்பினரை இனங்கண்டு, அவர்களின் ஆற்றலையும் அனுபவத்தையும் மேம்படுத்துவது மிகவும் அத்தியாவசிமானதும் அவசரமுமான தேவையாக உள்ளதுடன் பொதுவான சமூகப்பணி அணுகுமுறை அறிவும் (Generic approach) கலந்த சமதாயப்பணியறிவு எமக்கு இன்றியமையாததாக உள்ளது.

எனவே இன்று வழங்கப்படும் சமுகப்பணி மற்றும் சிறுவர் பாதுகாப்பு டிப்புளோமாப் பாடநெறிகள் பொதுவான மற்றும் சிறப்புப் பிரச்சினைகளைக் கையாள்வதற்குரிய வகையில் சமுதாயப்பணியாளர்களை பயிற்றுவிக்கத்தக்கவாறு வடிவமைக்கப்பட வேண்டியுள்ளதுடன் இதற்குரிய களப்பயிற்சியும் இந் நோக்கத்தினை நிறைவேற்றத்தக்கவாறு அமையவேண்டும். இன்று எமது மக்களிடையே சிக்கலான உளநோய்கள் மற்றும் உடல்ரீதியான சிறுநீரக நோய்கள், வெளித்தெரியா நோய்களௌன சவால்கள் பெருகியுள்ளதோடு, டெங்கு போன்ற சூழல்தொடர்பான சவாலகளும் பெருமளவு அதிகரித்துள்ளன. மேலும் புவி வெப்படைதல், சிறந்த கழிவுமுகாமைத்துவமின்மை, வீதிவிபத்துக்கள், கொலைகள், ஆயுத வன்முறைகள் என்பனவும் அதிகரித்துள்ளன. இவற்றிற்கென சூழல்சமுகப்பணி, பசுமைச்சமுகப்பணி, சமுதாய அணித்தரட்டல் போன்ற விசேட அறிவுகள் தேவைப்படுவதோடு அண்மையில் மீதோட்டமுல்லையில் ஏற்பட்ட அனர்த்தமும் மலையகப்பகுதியில் ஏற்பட்ட அனர்த்தமும், அங்கு ஏற்படுகின்ற மண்சரிவு இடர்களும் பெரும் சவால்களாக உள்ளதுடன் இவற்றை எதிர்கொள்ளுவதற்கான தயார்படுத்தலும், இடர்களுகக்ப் பின்னரான நெருக்கடித்தலையீடும் மிகவும் அவசியமாக உள்ளன.

அத்துடன் மனிதக்கடத்தல்கள், நிதிநிறுவனங்களின் மோசடி, பெண்கள் பங்கேற்பு, வலுப்படுத்தல் போன்ற துறைகளும் மிகவும் கவனத்திலெடுக்கப்படவேண்டிய விடயங்களாக உள்ளன. மேலும் மேலைத்தேய அறிவுத்தளங்களை மட்டும் நம்பியிருக்காமல் எமக்கான சமுதாயப்பணியை உருவாக்குவதும், அவற்றை மக்களிடையேயும் ஏனைய துறையினரிடையேயும் பிரபலப்படுத்தி, அனைத்து துறைகளிலும் ஏதோ ஒரு வகையில் சமுதாயப்பணி அணுமுறையை உட்புகுத்த வேண்டியுள்ளது. பல்கலைக்கழகங்கள் இன்றும் இந்தவிடயத்தில் மிகவும் அடிப்படை நிலையிருப்பதோடு, ஒருசில பல்கலைக்கழகங்கள் பலமான அல்லது மிகச்சரியான களப்பயிற்சிகளில்லாமல் சமுதாயப்பணி முறைமையின் நோக்கத்தை அடைய முடியாமலுள்ளன.

**முடிவுரை**

தேசிய சமுக அபிவிருத்தி நிறுவனம் மேற்கூறப்பட்டுள நிலமைகளைக் கருத்தில் கொண்டு, இன்று இலங்கையில் சமுகப்பணிப் பாடத்தை

வெவ்வேறுபட்ட மட்டங்களில் வழங்கக்கூடிய அங்கீகாரமும், அதிகாரமும் உள்ள நிறுவனம் என்ற வகையில், சமுதாயப்பணி முறைமையினை தொழில்வாண்மையின் தேர்ச்சியோடு தனது பெரும்பாலான பாடநெறிகளிலும் வழங்கத் தீர்மானித்திருப்பதுவும் ஒருவகையில் சமுகப்பணிச் செயற்பாடுகளைப் பரவலாக்கம் செய்யும் ஒரு முயற்சியாகக் கொள்ளலாம். மேலும் தேசிய சமுக அபிவிருத்தி நிறுவனம் தனது கற்கை நெறிகளைக் கொழும்புக்கு வெளியேயும், வட-கிழக்கு மாகாணங்களிலும் கூட்டிணைந்த முயற்சியாகவும், தனியாகவும் வழங்குவதோடு சமுதாயப்பணிக் களச்செயற்பாடுகளை மாணவர்கள் மேற்கொள்ளும்போது அந்தந்தப் பகுதிகளிலேயே மேற்கொள்வதும் சமூகப்பணி மாணவர்களையும், மக்களையும், உரிய பங்காளிளையும் சமூகப்பணி பற்றிய புரிதலில் ஒருபுள்ளிக்கு கொண்டுவர உதவும் எனலாம்.

## References


Bernstein, A. J. (1995). Redefining social work's emphasis on the'social': the path to development. *International Social Work*, *38*(1), 53-67.

Cavaye, J. (2006). Understanding community development. *Cavaye Community Development*.

Estes, R. J. (1997). Social work, social development and community welfare centers in international perspective. *International Social Work*, *40*(1), 43-55.

Kendra, C. (2017). What Is a Social Worker and What Do They Do?:job duties, earning, and training requirements for social workers. Retrieved from https://www.verywell.com/what-is-a-social-worker-2795656

Rwomire, A. (2011). The role of social work in national development. *Social Work & Society*, *9*(1), 108-118.

Skrodele-Dubrovska, I. (2012). Main tasks of social worker in reducing poverty for families with children and social inclusion policy in Latvia.In *SHS Web of Conferences* (Vol. 2, p. 00028).EDP Sciences.

Stutz, F. P., & De Souza, A. R. (1998).*The world economy: Resources, location, trade, and development*. Prentice Hall.

Todaro, M. & Smith, S. C. (2003).Economic development. Harlow, England, Pearson/Addison Wesley